**CC**.**NO**. 68/2017

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1, சந்திரசேகர், த/பெ. மூக்கன், சி.எம்.பி.எண்.16/2025, தேதி 30.07.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தற்போது எம் டெக்சில் கூலி வேலை செய்து வருகிறேன். காலை 09.00 மணிக்கு வேலைக்கு சென்று மதியம் வீட்டிற்கு சாப்பிட வருவேன். மாலை 07.30 மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு வருவேன். நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவை நான்தான் எழுதினேன். 08.06.2013 அன்று நான் புகார் மனுவை எனது வீட்டில் வைத்து எழுதினேன். அன்றைய தினமே காவல் நிலையம் சென்று புகாரை கொடுத்தேன். போலிசார் சி.எஸ்.ஆர். நகல் எனக்கு கொடுத்தார்கள். 02.04.2015 அன்றுதான் நான் காவல் நிலையத்தில் புகாரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கூறியது போல முதலில் கொடுத்த புகார் மனுவின் பேரில் போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்ற உத்தரவின் பேரில் மீண்டும் காவல் நிலையத்தில் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இரண்டாவதாக கொடுத்த புகார் மனுவை நான் காவல் நிலையத்தில் வைத்துதான் எழுதினேன். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் ஏற்கனவே புகாருக்கு கொடுத்த சிஎஸ்ஆர் மனு ரசீது கொடுத்ததை பற்றியோ, அதன்பேரில் நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றதை பற்றியோ, அந்த வழக்கின் எண்ணை குறிப்பிட்டோ, கூறவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.1 புகார் மனுவில் எந்த தேதியில் எதிரி எனக்கு போன் செய்தார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புகார் மனுவில் எந்தெந்த பழைய நாணயங்கள் என்றும், எவ்வளவு எண்ணிக்கை என்றும், எவ்வளவு பணம் என்றும்,

அதனுடைய மதிப்பு எவ்வளவு என்றும், நாணயங்களில் என்னென்ன உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. கோயம்புத்தூர், சென்னை, திருச்சிராப்பள்ளி நாணய சங்க உறுப்பினராக உள்ளேன். அதற்கு மாதாந்திர மற்றும் வருடாந்திர கண்காட்சியில் கலந்துகொள்வேன். கண்காண்காட்சிகளில் நிறைய நாணயங்கள் இருக்கும், அதை நான் பணம் கொடுத்து வாங்குவேன். கடந்த 30 வருடங்களாக அவற்றை சேகரிக்கும் பழக்கம் உண்டு. அவ்வாறு சேகரிக்கப்பட்ட நாணயங்களை வாங்குவேன், விற்கமாட்டேன். கோயம்புத்தூர், சென்னை, திருச்சிராப்பள்ளி நாணய சங்க உறுப்பினராக உள்ளேன் என்பதற்கான உறுப்பினர் அட்டையை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நாணய சங்க உறுப்பினர் அடையாள அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்க செய்ய சொன்னால் தாக்கல் செய்கிறேன். நான் 20 வருடங்களுக்கு மேலாக நாணய சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன்.

3. எதிரி எந்த எண்ணிலிருந்து போன் செய்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. முதல் நாள் போன் செய்தார், அடுத்த நாள் வந்து நாணயங்களை எடுத்து சென்றவிட்டார். எனது மொபைல் எண் 8825890016 ஆகும். மேற்படி எனது எண்ணிற்கு எதிரி போன் செய்ததை காட்டுவதற்கு ஸ்கிரீன்ஷாட் அல்லது போன் ரெக்கார்டு, சிடிஆர் ரெக்கார்டு காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி எனது மகள்களிடம் வந்து நாணயங்களை பெற்று சென்றதாக சொல்லும் நிலையில் நான் அதை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வேலைக்கு சென்றிருந்தேன். எனது மகள்களை ஏமாற்றி வாங்கி சென்றுவிட்டார். என் வீட்டிலோ, எனது தெருவிலோ சிசிடிவி கேமராக்கள் இல்லை என்றால் சரிதான். பழைய நாணயங்களை நான் விற்பனை செய்கிறேன் என்று நாளிதழில் விளம்பரம் செய்தேனா என்றால் இல்லை. சம்பவத்தின்போது எனது பெரிய மகளின் வயது 12, இளைய மகளின் வயது 10 இருக்கும். சம்பவத்தின்போது எனது இரண்டு மகள்களும் மார்னிங்ஸ்டார் பள்ளியில் படித்தார்கள். எதிரி நாணயங்களை எனது மகள்களிடம் பெற்றுச் சென்றதாக சொல்லப்படும் கிழமை என்னவென்று எனக்கு ஞாபகமில்லை. நான் நாணயங்கள் வைத்திருந்த சூட்கேசின் நிறம் மற்றும் எதிரி கொண்டு வந்த பையின் நிறம் ஆகியவற்றை குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி கொண்டு வந்தது ஸ்வீட் கடை பை ஆகும். எதிரி எனது வீட்டிற்கு வந்து அவர் கொண்டு வந்த பையை வைத்து சென்றதாக நான் கூறும் நிலையில் அந்த பைக்குள் என்ன வைத்திருந்தார் என்று நான் எதிரியிடம் நான் கேட்டேனா அல்லது பார்த்தேனா என்றால் இல்லை.

4. எதிரி எனது இருசக்கர வாகனத்திலேயே ஏறி அரசி லாட்ஜில் இறக்கிவிட கூட்டிக்கொண்டு சென்றதால் அதைப் பற்றி நான் கேட்கவில்லை. நேரமாகிவிட்டதால் நான் அந்த பையைப் பற்றி கேட்கவில்லை. எதிரி என் வீட்டிற்கு புதிதாக வந்திருக்கும் நிலையில் அவர் யார் என்றும், எதற்காக என் வீட்டிற்கு வந்தார், அவரது அடையாள அட்டை ஏதேனும் நான் கேட்டு வாங்கினேனா என்றால் இல்லை. அவரது பெயரை எனது டைரியில் அவரது கைப்படவே எழுதிக்கொடுத்தார். அதை நான் தற்போதும் பத்திரமாக வைத்துள்ளேன். அந்த டைரியை நான் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். களவு போன நாணயங்களை போலிசார் மீட்டு கொடுத்துவிட்டனரா என்றால் இல்லை. எதிரியை பிடித்து வைத்திருப்பதாகவும், எனது நாணயங்களை அவரிடமிருந்து பறிமுதல் செய்து வைத்திருப்பதாகவும் போலிசார் கூறினார்களா என்றால் எதிரியை பிடித்து வைத்திருப்பதாக மட்டும் கூறினார்கள், நாணயங்கள் குறித்து கூறவில்லை. களவு போன நாணயங்கள் இதுவரை எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. எனது டைரியில் எதிரி தனது பெயரை எழுதி சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் என்று எழுதிக் கொடுத்தார். மேற்படி முகவரிக்கு சென்று எதிரி உள்ளாரா என்று பார்த்தேனா என்றால் 2,3 நாட்களுக்குள் சென்று பார்த்தேன். ஆனால் எதிரி அங்கு இல்லை, அது போலியான முகவரி. மேற்படி விவரத்தை எனது புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் நான் கூறவில்லை என்றால் சரிதான். எனது நம்பருக்கு போன் செய்த எதிரியின் போன் எண்ணை குறித்து அது யாருடைய போன் நம்பர், அதன் உரிமையாளரின் முகவரி குறித்து தெரிந்துகொள்ள நான் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. போலிசாரிடம் புகார் கொடுத்துவிட்டதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. எனது வீடானது மக்கள் நெருக்கம் நிறைந்த அருகருகே வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் சார்ந்துள்ள சங்கத்தின் பெயர் கோவை நாணயவியல் கழகம் ஆகும். போலிசார் என்னை இது சம்மந்தமாக ஒரு முறை விசாரித்தனர். போலிசார் முதல் தகவல் அறிக்கையின் நகலை என்னிடம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் எப்போது கொடுத்தார்கள் என்று ஞாபகமில்லை.

5. நான் சொல்வது போல மேற்படி சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் நாளிதழ்களில் விளம்பரம் செய்து பழங்காலத்து நாணயங்களை சேகரித்து மதுரை, திண்டுக்கல், கோவை, திருச்சி போன் மாவட்டங்களில் பழங்கால நாணயங்கள் சந்தையில் விற்பனை வருகிறேன் என்றும், அதன் போட்டியின் காரணமாக நான் வைத்திருந்த நாணயங்களை மேற்படி எதிரியின்

நண்பரான (பெயர் தெரியாத) குறைந்த விலையில் விற்பனை செய்துவிட்டு, அதன் மதிப்பு கூடிய நிலையில் அவரை தேடி பார்த்ததில் முகவரி தெரியாத காரணத்தால் மேற்படி எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாணயங்களை குறைந்த விலைக்கு கொடுத்துவிட்டு, பணம் பறிக்கும் நோக்கத்தில் மேற்படி புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC**.**NO**. 68/2017

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.2, யாழினி, த/பெ. சந்திரசேகர், சி.எம்.பி.எண்.16/2025, தேதி 30.07.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் விசாரணையில் சொல்லியதைத்தான் நான் நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தின்போது பிஎம்எச்எஸ் பள்ளியில் படித்தேன். எனது அப்பா எனக்கு விவரம் தெரிந்ததில் இருந்தே பழங்கால நாணயங்களை சேகரித்து வருகிறார். எந்த எண்ணிலிருந்து எனது அப்பாவிற்கு போன் வந்தது என்றும், எந்த தேதியில் போன் வந்தது என்றும், என்ன உரையாடல் நடந்தது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா பழங்காலத்து நாணயங்களை சேகரித்து குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்திற்கு சந்தையில் விற்பனை செய்வார் என்றால் சரிதான். அப்பாவிடம் நாணயங்களை அவரது நண்பர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வந்து பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். எனது அப்பாவிடம் எந்த விதமான நாணயங்களை வைத்துள்ளார் என்றும், அதன் மதிப்பு எவ்வளவு என்றும், அதன் எண்ணிக்கை எவ்வளவு என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவத்தின்போது டியூசன் செல்வேன் என்றால் சரிதான். அப்பா எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எதிரி எனது வீட்டிற்கு வந்து நாணயங்கள் வாங்கியதை எனது அப்பா சொல்லித்தான் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. எனது அப்பா காலையிலேயே வீட்டிலிருந்து சென்றுவிட்டார். அவர் சென்ற பிறகுதான் எதிரி எங்களது வீட்டிற்கு வந்து என்னிடம் நாணங்களை வாங்கி சென்றார். நான் எனது கையால் நாணயங்களை கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி என் வீட்டிற்குள் வந்து எனது அப்பா வைத்திருந்த சூட்கேஷை திறந்து அதிலிருந்த நாணயங்களை எடுத்து சென்றுவிட்டார்.

2. நானும், எனது தங்கையும் எதிரி நாணயங்களை எடுக்கும்போது உடனிருந்தோம். நான் என் அப்பாவிடம் நாணயங்களை பெற்று சென்றதை போன் மூலம் தெரிவித்தேனா என்றால் இல்லை. என்னை போலிசார் விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திற்கு வந்த பிறகுதான் எனக்கு தெரியும். மேற்படி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், எனது அப்பா என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா வைத்திருந்த நாணயங்களை மேற்படி எதிரியின் நண்பரான (பெயர் தெரியாத) குறைந்த விலையில் விற்பனை செய்துவிட்டு, அதன் மதிப்பு கூடிய நிலையில் அவரை தேடி பார்த்ததில் முகவரி தெரியாத காரணத்தால் மேற்படி எதிரி மீது எனது அப்பா புகாரை கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாணயங்களை குறைந்த விலைக்கு கொடுத்துவிட்டு, பணம் பறிக்கும் நோக்கத்தில் மேற்படி புகாரை எனது அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC.NO**. 68/2017

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.3, பவித்ரா, த/பெ. சந்திரசேகர், சி.எம்.பி.எண்.16/2025, தேதி 30.07.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் சொல்லியதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் மார்னிங்ஸ்டார் பள்ளியில் 6 ம் வகுப்பு படித்து வந்தேன். எனது அப்பா பழங்கால நாணயங்களை எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே சேகரித்து வருகிறார். பழங்கால நாணயங்களை பார்ப்பதற்கு யாரும் எங்கள் வீட்டிற்கு வந்ததில்லை. எனது அப்பாவிற்கு யாரிடமிருந்து எந்த எண்ணிலிருந்து போன் வந்தது என்றும், எந்த தேதியில் எப்போது வந்தது என்றும், என்ன கலந்துரையாடல் செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. காணாமல் நாணயங்களளின் மதிப்பு எவ்வளவு என்பது பற்றியும், அவை எந்த வகையை சேர்ந்தது என்றும் எனக்கு தெரியாது. எனது அப்பா காலை 09.00 லிருந்து 09.30 மணிக்குள் வேலைக்கு செல்வார். எப்போதும் வழக்கமாக மதியம் 01.30 மணிக்கு சாப்பிட வீட்டிற்கு வருவார். எனது அப்பாவிற்கு முதல் முறையாக எப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு எதிரி பேசினார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அப்பாவும் சொல்லவில்லை, எனக்கும் தெரியாது. எனது தந்தைக்கு தகவல் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. போலிசார் என்னை ஒரு முறை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். எனது அப்பாவுடன் 08.06.2013 அன்று புகார் கொடுக்க நான் உடன் சென்றேன். புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் சிஎஸ்ஆர் ரசீது கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை.

2. புகார் கொடுத்ததற்கு பிறது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். உண்மையாகவே அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக எனது

அப்பா வேலை செய்யும் இடத்திற்கு சென்றோ அல்லது அம்மாவிடமோ உடனடியாக தகவலை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், எனது அப்பா என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா வைத்திருந்த நாணயங்களை மேற்படி எதிரியின் நண்பரான (பெயர் தெரியாத) குறைந்த விலையில் விற்பனை செய்துவிட்டு, அதன் மதிப்பு கூடிய நிலையில் அவரை தேடி பார்த்ததில் முகவரி தெரியாத காரணத்தால் மேற்படி எதிரி மீது எனது அப்பா புகாரை கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாணயங்களை குறைந்த விலைக்கு கொடுத்துவிட்டு, பணம் பறிக்கும் நோக்கத்தில் மேற்படி புகாரை எனது அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC.NO**. 68/2017

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.4, விமலா, க/பெ. சந்திரசேகர், சி.எம்.பி.எண்.16/2025, தேதி 30.07.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் சொல்லியதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பிருந்தே பழங்கால நாணயங்களை சேகரித்து வருகிறார். எனது கணவர் என்னென்ன வகையான நாணயங்கள் வைத்துள்ளார் என்றாலும், எவ்வளவு நாணயங்கள் வைத்துள்ளார் என்றாலும், அதன் மதிப்பு எவ்வளவு என்றாலும் எனக்கு தெரியுமா என்றால் வகை மற்றும் மதிப்பு தெரியாது. யாரிடமிருந்து நாணயங்களை வாங்குவார் என்று எவ்வளவுக்கு வாங்குவார் என்று எனக்கு தெரியுமா என்றால் நாணயங்கள் கண்காட்சிகளில் சென்று பணம் கொடுத்து வாங்கி வருவார். நாங்கள் சம்பவத்தின்போது ஸ்டேனரிஸ் மற்றும் பேன்சி ஸ்டோர் வைத்திருந்தோம். எங்களது கடையை 08.30 லிருந்து 09.00 மணிக்குள் கடையை திறந்துவிடுவோம். இரவு 09.00 மணிக்கு கடையை மூடிவிடுவோம். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவர் சொல்லித்தான் தெரியும். சம்பவத்தன்று மதியம் நேரம் தெரியவில்லை, நானும் எனது கணவருடன் புகார் கொடுக்க உடன் சென்றேன். எனது கணவருக்கு யாரிடமிருந்து எந்த எண்ணிலிருந்து போன் வந்தது என்றும், எந்த தேதியில் எப்போது வந்தது என்றும், என்ன கலந்துரையாடல் செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது.

2. போலிசார் முதல் முறை புகார் கொடுத்தபோது மட்டும்தான் ஒருமுறை எங்களது வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், எனது கணவர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வைத்திருந்த நாணயங்களை மேற்படி எதிரியின் நண்பரான (பெயர் தெரியாத) குறைந்த விலையில் விற்பனை செய்துவிட்டு, அதன் மதிப்பு கூடிய நிலையில் அவரை தேடி பார்த்ததில் முகவரி தெரியாத காரணத்தால் மேற்படி எதிரி மீது எனது கணவர் புகாரை கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாணயங்களை குறைந்த விலைக்கு கொடுத்துவிட்டு, பணம் பறிக்கும் நோக்கத்தில் மேற்படி புகாரை எனது கணவர் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**